# Skanda Pooranam



921
ஸ்கந்
SL/PR



உ
சிவமயம்
ஓம்

# ஸ்கந்த புராணம்

**Born on**
ஆதி

**19**
*
**09**
*
**1941**



**Demised**
அந்தம்

**07**
*
**01**
*
**2002**

திதி:- அமர பக்ஷ நவமி

யாழ் – வண்ணையூர்

## அமரர் பாலசுப்பிரமணியம் ஸ்கந்தானந்தா

BALASUBRAMANIAM SKANDHANANDHA
(Whalf Clerk Special Harrison Shipping (Pvt) Ltd.{Maharaja Group})

அவர்கள் சிவபதம் அடைந்தமை குறிக்கும்

# A Memorrial Tribute

# நினைவு மலர்

**09 - 02 - 2002**

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

35608

# அமரர். பாலசுப்பிரமணியம் ஸ்கந்தானந்தா அவர்களின் வாழ்வின் பூரணம்

ஈழத் திருநாட்டின் வடபாலமைந்த யாழ் –தெல்லியூரில் மாணிக்கமெனத் திகழும் மகாதனையில் "நரசிம்ம முதலி, புவனி காவல முதலி" வழித்தோன்றலான "பாலசுப்பிரமணியம்" அவர் தம் சொந்த முறைப் பெண் "பூரணம்" தம்பதிகளின் மூன்றாம் மகனாக 1941-09-19ல் இப் பூவுலகில் உதயமானார்.

இவர் தனது பெற்றோருடன் வண்ணை வைத்தீஸ்வரர் அருள் பாலிக்கும் வண்ணார் பண்ணையை வதிவிடமாகக் கொண்டிருந்தார். இவர்கள் பன்றிக் கோட்டு பிள்ளையார் கோவில் அருகில் வசித்தனர். தந்தை கிராமத்தலைமைக்காரர் ஆகவும் பல கோவில்களின் தர்மகர்த்தா உறுப்பினராகவும் சமூக சேவையாளராகவும் இருந்தமையால், இவரும் இவரது சகோதரர்களும் சைவச் சூழலில் சைவநெறி தவறாது வளர்ந்தனர்.

ஸ்கந்தானந்தாவின் உடன் பிறப்புக்களான சச்சிதானந்தா, விவேகானந்தா, சிவானந்தா, சண்முகானந்தா, நித்தியானந்ததேவி, அருளானந்ததேவி ஆகியோருடன் "நகமும் சதையும் போல" ஒட்டி உறவாடி வாழ்ந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யா/நாவலர் சைவப்பிரகாச வித்தியா சாலையிலும், உயர் கல்வியை யா/இந்துக் கல்லூரியிலும் பயின்றார்.

இவர் தந்தைக்கு உதவியாக வீட்டிலும், ஊரிலும் அயலிலும், சமூகத்திலும் பல சேவைகளைச் செய்தார். தொழில் ரீதியாக உதவியதால் தந்தையாரின் கிராம மக்கள் அனைவரையும் நன்கு தெரிந்து பழகினார். அக் கிராமத்தில் "ஸ்கந்தா" வைத் தெரியாதவர்கள் இல்லை.

1962ல் தொழில் புரியவென கொழும்பு வந்து City Carriers லும், பின் சீதுவை எண்ணெய்க் கொழுப்பு கூட்டுத்தாபனத்திலும் தொடர்ந்து மகாராஜ நிறுவனத்திலும் Wharf Clerk Special (Harrison Shipping (Pvt) Ltd.) ஆக கடமையாற்றினார். இவர் தம் கடமையை நேர்மையாகவும் திறமையாகவும் செய்தமையால் இவரை நிறுவனத்தினர் தொடர்ச்சியாக வருமாறு அழைத்துக் கொண்டனர். இறுதி மூச்சுவரை அங்கேயே கடமையாற்றினார்.

தன்னுடன் பணிபுரிவோரை தொழில் ரீதியாக தனக்குத் தெரிந்த எல்லாவற்றிலும் அவர்களுக்கு பயிற்சியும் ஊக்கமும் அளித்து திறம்பட செய்ய வைத்தார். "புதிதாக தனது அதே பணிக்கு வந்தோருக்கும் தனது

நீண்டகால அனுபவத்தை விரைவில் விளக்கி அவர்களுக்கு தொழில் ஆற்றலையும், திறமையாக கடமையாற்றவும் உதவினார்" என அவர் ஸ்தாபனத்தில் பணிபுரிவோரே அவரைப் போற்றும் வண்ணம் எல்லோருடனும் அன்னியோன்னியமாகக் கடமையாற்றினார்.

"தனது ஊரிலேயே திருமணம் செய்து வைத்தால் உறவுகள் விட்டுப் போகாது" என்ற தந்தையின் விருப்பத்தை பூர்த்தி செய்ய வேண்டி, தெல்லி, மகாதனையிலேயே கோணாசீமா "நரசிங்க வைரவர்" ஆசியுடன் வாழ்ந்த உறவினரான சின்னப்பு சுகிர்தரத்தினம் (சின்னக்கா) தம்பதிகளின் புதல்வி சற்குணவதியை 1971இல் இல்லற வாழ்வில் தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

வாழ்வு ஆனந்தமாக சென்ற வேளை தீடீரென தந்தையை இழந்தார். தாரமிழந்த தாய்க்கும், தந்தையை இழந்த சகோதரர்களுக்கும் தன்னிழப்பைப் பொருட்படுத்தாது அவர் தம் பாரியாருடன் ஆறுதல் அளித்தார். இவர் சகோதரர்களுக்கு மாத்திரமல்லாது மைத்துனர்கள், உறவினர்களது சகல கருமங்களிலும் தம் பாரியாருடன் இணைந்து முன்னின்று நடத்தி வைத்தார்.

இவரது இல்லற வாழ்வில் இறைவன் தந்த நன் முத்துக்களாக 1974இல் அருணா எனும் புதல்வியையும், 1978இல் திபாகர் என்னும் சற்புத்திரனையும் பெற்றுக் கொண்டார். பிள்ளைகளின் ஒழுக்கத்திலும் கல்வியிலும் மிகுந்த அக்கறை காட்டினார். அதன் பேறாக மக்களிருவரும் உயர் கல்வி பெற்று வேலை வாய்ப்பைத் தேடிக்கொண்டனர்.

கொழும்பை வதிவிடமாகக் கொண்ட இவர் தம் மனைவி மக்களுடன் சந்தோசமாக வாழ்ந்து, 07-01-2002 வரை தனது தொழிற்பணியைத் தவறாது செய்து வந்தார். யாருடைய இறுதி ஊர்வலங்களையும் விட்டு வைக்காது சென்று கலந்து கொள்வார். 07-01-2002 அன்று மாலை வீடு திரும்பிய ஓரிரு மணித்தியாலங்களில் காலன் அவரை கைப்பற்றி மீளாத்துயில் கொள்ளச் செய்து விட்டான். அன்னாரின் ஆன்மா சாந்தி அடைவதாக.

**ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!**

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து



## மனைவி சற்குணவதி மன உதிர்வுகள்.....

**என்னவரே! என் அவரே!**

என் நீங்காத நினைவுகளாக இன்றும், இன்னும் என் கண்ணீருள் நீந்தும்... எனக்கு நீங்கள், உங்களுக்குள் நானாக எமது இல்லற வாழ்வு, 30 கல்யாணத் தினங்களைக் கண்டுவிட்டது. கணவனாக, தந்தையாக ஊரின் உறவுகள் நண்பர்களோடு பாசம் உற்றவராக, பல கோணங்களில் உங்களில் நிறைவைப் பார்த்திருக்கிறேன். எமது பிள்ளைகள், குடும்பம், வாழ்க்கை, எதிர்காலம் என்ற வட்டத்தைச் சுற்றி வலம்வரும் உங்கள் கடும் உழைப்பு, திட்டமிட்ட செயற்பாடு என்பன உங்களோடு ஒன்றி நின்றன. இவற்றோடு உறவுகளுக்கும் ஆதரவும் அணைப்பும் இணைந்து நின்றன.

எமது பிள்ளைச் செல்வங்கள்... திவாகரை ஆளாக்க லண்டன் அனுப்பியமை... பிரசா உரிமையுடன் அவனை அங்கு காலூன்ற வைத்த கைங்கரியம், மகள் அருணா விரும்பிய படிப்பில் நிறைவை நோக்கி நீடிக்கச் செய்த நிலைப்பாடு, இடர்பாடுகளால் இடம்பெயர்ந்து கொழும்பு வாழ்வுக்கு செலவுச்சுமையை சீர் செய்த சிறப்பு, என் தாய் உள்ளத்துக்கு நீங்கள் தந்த நிம்மதிகள்.

அருமை மகள் திருமணம் பொருந்தும்வரை தரிக்காமல், என்னிடம் கூட அன்று வழமை போல் விடைபெறாமல், உடலை வருத்திய உபாதையை மறைத்து... குளியல் அறைக்குள் போன நீங்கள், விழிகளில் நிரந்தரமாக கண்ணீர் வழிய விட்டு மறைந்தது காலன் செய்த கேடோ விதியின் கொடிய வேலையோ? என்றும் நீங்கா நினைவோடு மனைவி "குஞ்சு"

அன்பும் அறனும் உடைத்து ஆயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது

## அன்பு அப்பாவே!

ஆண்டு ஐந்து போகுமட்டும்
அரவணைத்து வளர்த்திட்டீர்
அதன் பின்னர்
நிலையான செல்வமாம் கல்விதனைப்
பெறுவதற்கு கல்லூரியில் சேர்த்திட்டீர்
கல்லூரி வாழ்க்கை தன்னில் கண்டிப்பைக்
காட்டி கருணையுடன் வளர்த்திட்டீர்
இன்று கல்வியில் மேம்பட்டு காசினியில்
வாழ்கின்றோம். ஆனால்
அப்பா என்று அன்புடன் அழைக்க
ஆளில்லாது அழுது புலம்புகின்றோம்.
அப்பா உங்கள் அழகிய திருமுகத்தை
இந்த அகிலத்தில் நாம் காண்போமோ?
அன்பு காட்டி ஆதரவு சொல்வதற்கு
அவனியிலே யாருள்ளார்?
நின்றால் நடந்தால் உங்கள் நினைவு
நினைவகன்று துயின்றால்
உங்கள் முகம் கனவில் தெரிகிறது
ஆண்டாண்டு தோறும் அழுதுபுரண்டாலும்
மாண்டார் வருவாரோ வரமாட்டார்.
ஆதலால் அப்பா, நீங்கள் ஆவியுருவில்
அகிலத்தில் வந்தாவது எங்கள் நல்வாழ்விற்கு
வளமான வாழ்விற்கு வாழ்த்துக்கள் கூறுங்கள்

**அன்புடன் பிள்ளைகள்**
**அருணா, திபாகர்**

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்



## அருமை அண்ணாவே!

அண்ணா! அண்ணா! என்று
அன்புடனே அழைத்திட்டோம்
அழைத்த குரல் கேட்கின்றது
ஆன பதில் கிடைக்கவில்லை
சொல்லாமற் கொள்ளாமற் சோகத்தில்
ஆழ்த்திவிட்டு துரிதமாகப் போனதேனோ?
மின்னாமல் முழங்காமல் மேதினியை
விட்டுப் போனதேனோ?
மலர்வதனம் தன்னை இந்த
மண்ணிலே காண்போமோ?
திக்குத் தெரியாமல் திணறித் தவிக்கின்றோம்
உருளும் உலகம் ஒரு போதும்
நிலையில்லை
பிறந்தவர் இறப்பது பெருநிலத்தில்
உண்மையாகும்
எந்தன் வழியில் நீங்களும்
வருவீர்கள் என்ற ஒலி எங்கள்
காதில் கேட்கின்றது.

**சகோதரர்கள்**

தன்னைத்தான் காதலன் ஆயின் எண்ணைத்து ஒன்றும்
துன்னற்க தீவினைப் பால்

## உயிரில் கலந்த உறவே மீளாத் துயில் கொண்டதேனோ?

என் உயிரில் கலந்த உறவே
மீளாத்துயில் கொண்டு - எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்தியதுதான் ஏனோ!!!
எம் பாச அணைகளை ஓயாது
மோத விட்டே அவசரமாய்
ஓடிச் சென்றதும் ஏனோ அண்ணா!!!
உழைப்பில் அதி உத்தமனாய்
களைப்பின்றி எதிலும் எங்கும் முன்னின்று
எனக்கு மட்டுமல்ல எல்லோருக்கும்
மூத்தோனாய் முன்வழி காட்டிய
அருமை அண்ணல் அண்ணாவே
உங்கள் பிரிவெமை வாட்டுதய்யா!
உள்ளத்தில் உங்கள் அன்பு
எல்லையின்றி என்னில் கலந்திட
ஊமையாய் அழுது கொண்டே
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றுமே ஆண்டவனை அயராது
வேண்டுகின்றேன் அண்ணா!!!

**தம்பி சிவானந்தா**
உதவிப் பணிப்பாளர்,
உள்ளூராட்சித் திணைக்களம்,
திருகோணமலை.

ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல்



# APPRECIATION

We came to know Mr. K. B. Skandhanandha when he joined our services about ten years ago. He was a kind and helpful friend upto the time of his demise a few days ago.

He was always helpful and cheerfully carried out his day today work whether it be at the ports authority, or the customs on behalf of the company. Skanda was always at hand to any one who wishes to get his assistance to complete their task whilst he himself was always on the run. He never missed an opportunity to be an active participant in any of the functions organised by the colleagues.

He was always one to express his deep sense of gratitude for any kindness shown or favours done to him.

With his untimely death we have lost a good friend and colleague. We extend our sympathies to the members of his bereaved family.

May he attain moksha

**Staff**
**Harrisons Shipping (Pvt) Ltd.**

# அகல் விளக்கின் அஸ்தமனம்

திரு. ஸ்கந்தானந்தா "வயது எதற்குமே வரம்புகட்டுவதில்லை" என்பதை மெய்யாக்கி வாழ்ந்து வந்தவர். தனது அரசாங்க உத்தியோகத்தில் ஓய்வு பெற்ற பின்பும் இந்த புது யுக சகத்திரத்தின் இளைஞர்களுக்கு சளைக்காமல் உற்சாகத்துடன் உழைத்துக் காட்டடியவர். துறை முகத்திலும் சுங்கவரித் திணைக்களத்திலும் உற்சாகமாக இளையவர்கள் மத்தியிலும் தனது பழுத்த நிதான அனுபவங்களை செவ்வனெ நெறியாண்டு வெற்றி கண்டவர். அவரின் அமைதியான சுபாவமும், யாவரையும் மதிக்கும் அரிய பண்பும் அவருக்கு பலத்த மரியாதையுடன் கூடிய புகழை ஈட்டித் தந்தது. துறைமுக அதிகார சபை, சுங்கவரி அதிகாரிகள் அன்னாருக்கு அளித்த மரியாதையே இதற்குச் சான்றாகும். எந்தவொரு சிக்கலையும் தனது மதிநுட்பத்தால் அலசி ஆராய்ந்து தீர்வு காண்பது அவருக்கு உரித்தான தனிப் பாங்காகும். அவர் இளையவருக்கெல்லாம் ஒரு கல்விக்கூடம்.

தன் வாழ்நாள் பூராவும் தனது குடும்பத்தை எண்ணி மக்கள் சிந்தனையுடனேயே வாழ்ந்தவர். அவர்களின் முன்னேற்றமே குறிக்கோளாகக் கொண்டு கண்ணும் கருத்துமாக வளர்த்து ஆளாக்கினார்.

அவரின் நினைவுகள் நெஞ்சில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்க அன்னாரின் மறைவால் துயருறும் அவரது மனைவி மக்களுக்கு எனது ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

அன்னாரின் இம் மலரில் எனது எண்ணக் கருவூலங்களிற்கும் இடம் கிடைத்ததையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

**S. இரவீந்திரன்**
(அவருடன் பணிபுரிந்த
பொது முகாமையாளர்)
43, கிரகெறிப் பிளேஸ்,
தெகிவளை.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.



# ஸ்கந்தா எனும் பெருமகன்

"ஸ்கந்தா", என எனக்கு இற்றைக்கு பத்து வருடங்களுக்கு முன் இப்பெருமகனின் தொடர்பு முதலில் தொழில் ரீதியாக மட்டும் மட்டுப் படுத்தப்பட்டது. இதற்கு நாங்கள் இருவரும் சார்ந்து நின்ற தொழிலின் தன்மை ஒரு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இதே தொடர்பு காலஞ் செல்லச் செல்ல இதற்கு மேலான ஒரு பிணைப்பை ஏற்படுத்தியது. பணம், அதிகாரம் செலுத்தும் இக்காலகட்டத்தில், குறிப்பாக எமது தொழில்சார் நடவடிக்கைகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்ட சமயத்தில் இப்படி ஒரு தொடர்பு ஏற்படுவது மிகவும் அபூர்வம்.

"ஸ்கந்தா" என்னும் சாதாரண மனிதரின் நடவடிக்கையில் நான் ஒரு பெருமகனைக் கண்டேன். எடுத்த காரியத்தை ஆரவாரமில்லாமல் செய்து முடிக்கும் ஆற்றல், அதிகம் பேசாமல் தனக்கு தெரியாதவற்றைக் கேட்டு தெரிந்து கொள்ளும் பெருந்தன்மை, தனக்கு தெரிந்தவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் தன்மை என்னும் குணாதிசயங்களைக் கண்டேன். இவற்றிற்கும் மேலாக தான் வேலை செய்யும் நிறுவனத்திற்கு இவர் காட்டிய விசுவாசம், நம்பகத்தன்மை இப்படிப்பட்டவர்களை இன்று விரல் விட்டு எண்ணி விடலாம். இதற்குச் சான்றாக வேறொன்றும் கூற வேண்டியதில்லை. அன்னாரினது மறைவிற்கு முன்பும் மரணச்சடங்கிலும் அவரது நிறுவனம் செய்த பங்களிப்பு எத்தனை பேருக்கு கிட்டும்.

புவியிற் பிறந்த சகலரும் என்றோ ஒரு நாள் இறப்பது திண்ணம். பிறப்பெடுத்த சகல உயிர்களும் இறப்பதற்குரிய தினம், திகதி தெரியாவிட்டாலும் கிட்டிக் கொண்டு வருகின்றது என்ற உண்மையை யாரும் உணருவதில்லை. இது எவ்வளவு தூரம் உண்மை என்பதை நான் இவரின் மறைவில் உணர்ந்தேன். மறைவிற்கு இரண்டு நாட்களுக்கு முன் எனது வீட்டில் இவர் என்னுடன் கதைத்த பல விடயங்களை இப்போது நான் நினைவு கூர்கின்றேன்.

இம் மனிதரில் ஒரு கடமையுணர்வுள்ள தகப்பனைக் கண்டேன். தனது மகளின் படிப்பைப் பற்றி, வேலை வாய்ப்பைப் பற்றி பல எண்ணங்களைக் கொண்டிருந்தார். அடிக்கடி என்னுடன் இது சம்பந்தமாக உரையாடுவார்.

இவரின் பிரிவினால் வாடும் குடும்பத்தினருக்கு இவ் வார்த்தை ஓரளவு ஆறுதலைத் தரும். ஆனாலும் இந்த வெற்றிடத்தை நிரப்ப ஒருவராலும் முடியாது என்பது நிச்சயம். இந்த மனப்பக்குவத்தை எல்லாம் வல்ல இறைவன் கொடுப்பார் என வேண்டிக் கொள்கிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக!

**மு. இரவீந்திரகுமார்**
**சுங்க அத்தியட்சகர்**
**சுங்கத் திணைக்களம்**
**கொழும்பு.**

****

பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

****

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வோம்என்னும் நோக்கு.

****



## திரு. பாலசுப்பிரமணியம் ஸ்கந்தானந்தா

திரு. பாலசுப்பிரமணியம் ஸ்கந்தானந்தா 1984ஆம் ஆண்டு முதல் எங்கள் வீட்டில் தங்கி வேலைக்குச் சென்று வந்தார். அவர் மிகவும் அமைதியானவர், சாந்தமானவர். தன்னால் யாருக்கும் தொந்தரவு வராமல் பார்த்துக் கொள்வார். மிகவும் இனிமையானவர். அடுத்தவருக்கு உதவி செய்வதில் எப்பொழுதும் முதன்மையானவர். ஒவ்வொரு வருஷத் தொடக்கத்திலும் ஞாபகார்த்த பொருட்கள், கலண்டர், டயறி என்பன கொடுத்து நண்பர்களான எம்மை சந்தோஷப் படுத்துவார். நட்பை பகிர்ந்து கொள்வதில் அவர் ஓர் எடுத்துக் காட்டு என்றே கூற வேண்டும். அவரின் திடீர் மறைவு எம்மை ஆற்றொனாத் துன்பத்தில் ஆழ்த்தினாலும் அவர் விட்டுச் சென்ற சுவடுகள் அவரை என்றும் நினைவு கூர்ந்து கொண்டே இருக்கும். தனது கவலை, குறை, கஸ்டங்கள் எதுவானாலும் எம்முடன் கலந்து கதைத்து ஆறுதல் பெறுவார்.

எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும், அவர் ஊருக்கு, உறவினர்களுக்கு, அன்பர்களுக்கு செய்த நன்மைகள் ஒவ்வொருவரின் அடிமனதிலும் ஒலித்துக் கொண்டே இருக்கும். இவர் என்றும் எங்கள் உள்ளத்தில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்.

திரு. ஸ்கந்தாவின் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருடன் சேர்ந்து அவரின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

***ஓம் சாந்தி!***

**திரு. செ. விக்னேஸ்வரன் குடும்பம்**
**திருமதி. ப. நடராஜா**
**மற்றும் நண்பர்கள்**
**மூவர் வீதி,**
**வெள்ளவத்தை.**

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்.

# அன்புக்கு ஓர் அத்தான்

மனித வாழ்வில் மிகப் பெரிய துக்கம் மிகவும் அன்புக்குரியவர்களை எதிர்பாராது திடீரென இழப்பதேயாகும். மரணம் என்பதையும் அதன் கோர விளைவால் ஏற்படுத்தப்படும் இழப்புக்களையும் நிரந்தர பிரிவை அடைவதையும் அனுபவித்து உணருவதே மனிதனின் வாழ்வினில் எல்லா நிலைகளிலும் உதவியற்ற நிலையாகும்.

மிகவும் நெருங்கிய அன்புக் குரியவர்களை எண்ணிப் பார்க்க முடியா நிலையில் திடீரென இழக்கும் போதும் அவர்கள் பிரிவை அறியும் போதும் ஆறுதல் வார்த்தைகளோ எந்த உதவிகளுமோ இழப்பை ஈடு செய்வதில்லை.

அன்று நாட்டு நிலைமையால் பிரிக்கப்பட்டோம் இன்று நாம் உயிர் வாழ் உறவு நிலையில் நிரந்தரமாக பிரிக்கப்பட்டோமே என எண்ணும் போது எமதுள்ளம் உங்கள் பிரிவால் ஏங்கித் தவிக்கின்றதே. இத்தவிப்பை ஈடு செய்ய இனி ஏதும் ஏதம் இல்லை.

ஒரு வர்ரத்தின் முன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய போது உங்கள் சுகத்தையோ நலத்தையோ அல்லாது குழந்தைகளுக்கு புத்தி சொல்லும்படியும் உதவி செய்யும்படியும் கேட்டீர்களே, நாம் பிரிந்த பதினேழு ஆண்டுகள் கடிதமும் தொலைபேசியுமேயன்றி முகம் பார்த்து பேசவில்லை. தொலை பேசியில் கேட்ட குரல் காதில் தொனித்து ஓயவில்லை. இன்றைக்கு இருப்போரை நாளை காண்போமோ என நீங்கள் நிரந்தரமாய் பிரிந்து சென்று விட்டீர்களே!

என் அக்காவிற்கு அன்புக் கணவனாக அருமைக் குழந்தைகளுக்கு அன்பும் பாசமும் கொண்ட தந்தையாக எமக்கு அன்புக்கும் மதிப்புக்கும் உரிய அத்தானாக எம்பிள்ளைகட்கு அன்பு மாமாவாக உங்கள் உடன் பிறப்புக்களுக்கு அருமைச் சகோதரனாகவும் உறவினர்க்கு நல் நட்புறவு கொண்டவராய் நீங்கள் வாழ்ந்த காலங்களும் ஆற்றிய கடமைகளும் எம் நினைவைவிட்டு நீங்காது. உங்கள் பிரிவால் வாடும் எம் ஒவ்வொரு உள்ளத்திற்கும் ஆறுதலும் தேறுதலும் நீங்கள் விட்டுச் சென்ற இவ் நினைவுகள் தாமே "வாழ்வது மாயம் மண் ஆவது திண்ணம்" என்பதை உறுதியாக்க எம்மை விட்டு நிரந்தரமாய் பிரிந்தீரோ?

**உங்கள்பிரிவால் வாடும்**
**கதிர் குரும்பத்தினர்**
(மைத்துனர் சின்னப்பு கதிர்காமலிங்கம்)

அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.



# உறவுக்கு ஒரு ஸ்கந்தா!...

வண்ணார் பண்ணையில் கே.கே.எஸ். வீதியில் அமைந்த நாற்சார் வீடு. பீலி ஓடுகளால் வேயப்பட்ட கூரை. அமரர் ஸ்கந்தானந்தா பிறந்து வளர்ந்த... விதானையார் வீடு என்ற அடையாளப் பெயர் கொண்ட வீடு அது. அண்ணன் ஸ்கானந்தாவின் தந்தையாரின் அந்தியேட்டி அங்கு நடந்த நாள். அவருடன் முதன்முதல் அதிக நேரம் பழகிய தினம் அது. இடையிடையே சந்திப்பு அவருடைய குடும்பம் மகாதனையால் இடம் பெயர்ந்தது. கிளிநொச்சி உருத்திரபுரம் வந்தடைந்தது. எனது குடும்பத்துடன் சில ஆண்டுகள் ஒன்றி வாழ்ந்தது. நெருக்கம் அதிகரித்தது. திவாகர் இலண்டன் வந்தான். வீட்டுப்பிள்ளையாக பழகுவான். தொடர்புவிரிந்தது.

காணும் வேளை எல்லாம் கனிவு பொங்கப் பழகும் ஸ்கந்தானந்தாவில் நல்ல உறவினனைப் பார்த்தேன். நாட்டின் கேட்டில் பிள்ளைகள் தாக்கமுறாமல் காத்த தன்மைகளில் நிறைவான அப்பாவை கண்டேன். ஊரிலும் பின் நேரிலுமாக குடும்பக் கடமைகளை மனைவி பேண ஒத்துழைத்த வகையில் நல்ல கணவனாக ஜொலித்தீர். உடன் பிறப்புகளுக்கு நல்ல சகோதரனாக, ஒன்றியவர்களுக்கு உற்ற நண்பனாக, இளமைமுதல் இறப்பு வரை ஓயாத உழைப்பாளியாக... பரிமளித்தீர்.

இன்னும் பல காலம் வாழ்ந்திருக்கலாமே என்ற ஏக்கத்துயரை எல்லோர் மனதிலும் ஏற்படுத்திய உங்கள் மறைவு, "மனிதம் நிறைந்த மனிதர்" என்பதற்கு நல்ல சான்று.

***உங்கள் ஆத்மா சாந்தி பெறட்டும்!***

**பவை ஜெயபாலன்**
**லண்டன்.**

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு

## கந்தண்ணா

சிறுவயதில் எனக்குங்களைத் தெரிந்திருக்கவில்லை. உங்கள் தந்தையார் உறவுகள் விட்டுப் போகக் கூடாது என்று சொல்லியே உங்களை எங்கள் தெல்லியூர்-மகாதனையில் குஞ்சக்காவிற்குத் திருமணம் செய்து வைத்தார். அதன் பின்பே உங்களை நான் அறிந்து கொண்டேன்.

கொழும்பில் எனக்கு வேலை கிடைத்து வந்த போது உங்கள் ஒன்றுவிட்ட சகோதரன் தில்லையம்பல அண்ணையிடம் எனக்கு இருக்க இடம் வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தேன். அருகிலிருந்த நீங்கள் எதுவும் பேசவில்லை. ஆனால் நீங்கள் போய் கதைத்து எனக்கு Y.W.H.A விடுதியில் இடம் எடுத்துத்தந்தீர்கள். கதைக்காமலே காரியம் சாதித்த உங்களுள்ளம் பெரியது. மறுமுறையும் கொழும்பில் தங்க இடம் எடுத்து தந்துதவினீர்கள். பல உதவிகள் செய்தீர்கள் என்றும் என் நினைவில் இருப்பீர்கள்.

கந்தண்ணா நீங்கள் எங்களுக்குச் "சொந்தமில்லை, சொந்தமில்லை" என்று அடிக்கடி கூறிக் கொண்டு சண்டை பிடிப்பேன். இப்போ நீங்கள் யாருக்கும் சொந்தமில்லை மண்ணுக்கும் சொந்தமில்லை என்று இறைவனடி சேர்ந்தீரே. எதுவும் "சொந்தமில்லை" என்று உணர்த்திடவா?

***உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்***

அன்பு மைத்துனி
காசிலிங்கம். லீலாவதி
(சின்னா)

இன்றுளோர் நாளையிருப்பதுவும் பொய்யெனவே
மன்றுளோர் சொல்லும் வரையால் தெரிந்து.



## மாமாவே!

எங்கு சென்றீர்கள் மாமா எங்கு சென்றீர்கள்
உயர்வான எண்ணமும் ஊரவர் மனத்துள்ளுறைந்தும்
கள்ளமில்லாச் சிந்தனையும் கனிவும் உள்ள
உங்கள் முகம் காண துடிக்கின்றோம்
பல வருடம் காணாத உங்கள் திருமுகம்
காண ஏங்கியிருந்தோம் - ஆனால்
நீங்கள் எமக்கு ஒரு தரமேனும்
தரிசனம் தர மறந்து விட்டீர்களே!
கண் காணாத இடம் எங்கு சென்றீர்கள்.
கலங்குகின்றோம் இனி உங்கள் வதனம்
காண நாம் என் செய்வோம்.
வாழ்க்கை எனும் பெயர் தெரியா ஊருக்கு
வழி தெரியா பயணமதனைத் தொடர்ந்து
அறுபது ஆண்டுகளதனில் சங்கடங்கள் கலவரங்கள்
குழப்பங்கள் பயங்கரங்கள் அத்தனையையும் வென்று
இல்லம் எனும் நற் கோயிலில் இனிதே
கவனம் வகித்து நன்றாகவே நிர்வகித்து
உற்ற மனையாள், பிள்ளைகள், உடன்பிறந்தோர்
கதறிடவே எங்கு சென்றீர்கள் - மாமா
தொழில் ஸ்தாபனமதில் நேர்மை, கடமை,
கண்ணியம், நடுவு நிலைமையுடன் இனிதே
தொழில் புரிந்து சகநண்பர்கள், உறவினர்கள்
கண்ணீர் பெருகி நிற்க எங்கு சென்றீர்கள் - மாமா
உங்கள் வைர விழா அகவை மலர மறுவாழ்வு
காண விண்ணுலகம் சென்றீர்களோ!
காலன் உங்களை அழைத்தன னென்றாலும்
காவியமாய் வாழ்ந்திடுவீர்

***"கடமையில் கண்ணாக இருத்தலே கடவுளுக்குச் செலுத்தும் முதல் பிரார்த்தனை"***

மருமக்கள்

## பெரியப்பா!

எனக்கு ஓரேயொரு பெரியப்பா
பெருமையுடனிருந்தேன்
பெரியப்பா என அழைக்க
யாருளர் இனியிவ் அவனியில்
பெரியப்பா நீங்கள் செய்த
உதவிகளே பெரிதப்பா
இனிசெய்ய யாரப்பா
நான் என்ன செய்வேன்
பேரிறையடி சேர இறைஞ்சுகிறேன்

**பேறாமகள்**
**மயூரா**

தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை



## பெரியப்பா! பெரியப்பா!

பெரியப்பா பெரியப்பா – இனி
யான் யாரை அழைப்பது
பெரியப்பா என்று
தொலைபேசியில் கேட்ட செய்தியது
பொய்யாக இருக்க கூடாதா – என்று
புலம்பினேன் பலவாறு
விளக்கில் விழுந்த விட்டில்
பூச்சியது போல்விழுந்தே கதறினேன்
பெரியப்பா வேண்டுமென்று!!!
மின்னாது முழங்காது வரும்
மழையதுபோல் சொல்லாமல் கொள்ளாமல்
எம்மையெல்லாம் தவிக்க விட்டு
அவசர அவசரமாய் சென்றது
எங்கு தானோ பெரியப்பா?
கொழும்பு வந்து நின்ற போதெல்லாம்
நிரு நிரு என்று நீளமாய்
என்னை அழைத்து அன்பூட்டி
அறிவூட்டி அமுததுவும் ஊட்டிய
உங்களை இனி எங்குதான்
காண்பேனோ பெரியப்பா பெரியப்பா!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
என்றும் அன்புப் பெறாமகள் நிரு
ஆண்டவனை அனுதினம் பிரார்த்திக்கின்றேன்.

**பெறாமகள்**
**நிரு**

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

# அருணா அக்காவின் அப்பா

பிறப்பவர் இறப்பது உண்மையே. ஆனால் திடீர் இழப்பு எவ்வளவு வேதனை என்பதை எனது அம்மாவின் திடீர் மரணம் எனக்கு ஒரு நல்ல அனுபவம். பெரியப்பா உங்கள் திடீர்ப் பயணம் என்னை மட்டும் அல்ல அருணா அக்காவை எப்படி வாட்டியிருக்கும் என என்னால் உணரமுடியும். பெரியம்மாவை நினைத்தேன் மறு புறத்தில் திபாகர் அண்ணாவை நினைத்தேன். உங்கள் திடீர்ப் பிரிவால் அண்ணா லண்டனில் தனித்திருந்து வாடப் போகிறானென எண்ணும் போது கவலை மீதுரப் பெறுகிறது.

நாட்டுச் சூழல் காரணமாக எட்டு வயது வரையே உங்களைக்காணும் பாக்கியம் பெற்றேன். அக் காலத்தில் நீங்கள் என் மீது காட்டிய அன்பை என்றுமே மறக்க முடியாது. எட்டு வயதின் பின் இன்று வரை உங்கள் படத்தைப் பார்த்து "அருணா அக்காவின் அப்பா" எனப் பெருமையாகக் கூறி வந்தேன். கடைசியாக உங்கள் முகத்தைப் பார்ப்போம் எனத் துடித்தேன். ஆனால் நாட்டு நிலைமை போக்கு வரத்துப் பிரச்சனையால் தடையானதே. படத்தைப் பார்த்தே "அருணா அக்காவின் அப்பா" எனக் கூறிக் கொண்டே இரு என விட்டு விட்டுப் போய் விட்டீர்களே பெரியப்பா.

உங்கள் கபடமற்ற உள்ளம் கடைசி மூச்சு வரை மக்களுக்காக உழைத்த உழைப்பு வீண் போகவில்லை. உங்கள் கடைசி அறிவு நிலையில் உங்கள் மனைவியும் இரு குழந்தைகளும் வசதியான நிலையில் இருக்கிறார்கள் என்ற பூரிப்பில் உங்களை ஆழ்த்தி பற்றறுத்து, நீராட வைத்து மனச்சுத்தம், உடற் சுத்தத்துடன் தன் பாதார விந்தத்தில் சேர்த்தானே பரமன்.

*"நாதன் நாமம் நமச்சிவாயவே"*

பெறாமகன்
அகிலன்



# ஸ்கந்தா!

ஸ்கந்தா ஸ்கந்தா என்று
கதறியழுகின்றோம்
கந்தன் காலடியில் நீர்
கவனமாய் சேர்ந்தீரோ
கந்தனை விட்டுப் பிரியாது
வாழ்வதற்கு வேண்டி
வையகத்தில் அழுகின்றோம்

நண்பர்கள்
உறவினர்கள்

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை

# புதிர்கள்

1). கடற்கரையில் சூரியன் மறைவதைப்பார்த்து ரசித்த ஐந்து பேர் வரிசையாக அமர்ந்திருக்கிறார்கள். (A)ன் வலப்பக்கத்தில் (B)இருக்கிறான். (E)என்பவன் (B)ன் வலப்பக்கமாகவும் (D)ன் இடப்பக்கமாகவும் இருக்கிறான். (C)என்பவன் (D)ன் வலப்பக்கத்தில் இருக்கிறான். ஆயின்
I). வடக்கு அந்தத்தில் இருப்பவன் யார்?
II). தெற்கு அந்தத்தில் இருப்பவன் யார்?

2). ஆறு கார்கள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டுள்ளன. கறுப்புக்கார் ஒரு முடிவில் நிற்கிறது. பச்சைக்கார் கறுப்புக்காரிலிருந்து 3வது தரிப்பில் நீலக்கார் கறுப்புக்காருக்கு பக்கத்தில் இல்லை. நீலக்கார் கறுப்புக்காரிலிருந்து 2வது தரிப்பில் நிற்கிறது. வெள்ளைக்கார் சிகப்புக்காருக்கு அருகில் உள்ளது. மஞ்சள்கார் சிவப்புக்காரிலிருந்து 3வது தரிப்பிடத்தில் நிற்கிறது.
I). வெள்ளைக்கார் எந்தெந்த கார்களுக்கிடையில் உள்ளது?
II). இரண்டு முடிவிடங்களிலும் உள்ளகார்களுக்கு அருகில் உள்ள கார்களின் நிறங்கள் யாவை?
III). பச்சைக்காருக்கு அதிகதொலைவில் உள்ளகார் எது?

3). ஒரு குரங்கு 50m உயரமான வழுக்கு மரமொன்றில் ஏறத் தொடங்குகிறது. ஒவ்வொரு நிமிடமும் 1m ஏறும்போதும் 1/2m சறுக்கி கீழிறங்குகிறது. அது வழுக்கு மரத்தின் உச்சியை அடைய எவ்வளவு நேரம் எடுக்கும். I).200 நிமிடங்கள் II).100 நிமிடங்கள் III).150 நிமிடங்கள் IV).எதுவுமில்லை

4). ஒரு இளவரசனுக்கு நாக புஸ்பம் ஒன்று தேவைப்பட்டது. நாகலோகதத்தின் மூன்று வாசல்களையும் கடந்து தான் அப்புஸ்பம் இருக்கின்ற இடத்திற்குச் செல்ல வேண்டும். ஒவ்வொரு வாயிற்காவலனும் நீ கொண்டு வரும் புஸ்பங்களில் அரைவாசியையும் மேலதிகமாக ஒன்றையும் தரவேண்டுமென வற்புறுத்தினர். அவனுக்கு ஒரு புஸ்பம் தான் வேண்டும். இதற்கு அவன் ஒப்புக்கொண்டு மூன்று வாசல்களையும் கடந்து புஸ்பங்கள் உள்ள தோட்டத்திற்கு ச் சென்றான். ஒரு புஸ்பத்திற்கு கூடுதலாக எடுத்துக்கொண்டு திரும்பினான். அவன் எடுத்து வந்த புஸ்பத்தின் எண்ணிக்கை எத்தனை?

(விடை பக்கம் 22)



# பொது அறிவு

1). ஐக்கிய நாடுகள் சபை என்ற பெயர் உருவாகக் காரணமாக இருந்தவர் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஃபிராங்கிளின்ரூஸ்வெல்ட்

2). ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகளுக்கென வழங்கும் அமைப்பு யுனிசெவ்

3). ஐக்கிய நாடுகள் சபையில் உத்தியோகபூர்வ மொழிகள் ஆங்கிலம், பிரஞ்சு, ரஷ்யா, சீனா, அரபு, ஸ்பானி

4). ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை அலுவலகம் நியூயோர்க்கில் அமைந்துள்ளது.

5). விமானங்களின் சக்கரங்களில் நைதரசன் அடைக்கப்படுகிறது ஏனெனில் தரையிறங்கும் போது தரையுடன் உராய்வதால் சூடாகி தீப்பிடிக்காமல் இருப்பதற்காகும்.

6). கின்னஸ்புக் எனும் உலக சாதனைப் புத்தகத்தை ஐக்கிய ராச்சியத்தை சேர்ந்த பேர்ல் எஸ் பேக் 1955ல் உருவாக்கினார்.

7). ஜென்ட்டூ எனப்படும் பெங்குவின் இனப்பறவைகள் தங்கள் கூடுகளை கற்களால் கட்டுகின்றன.

8). படிப்பதற்கு போதியளவு ஒளியை 12 மின்மினிப் பூச்சிகளால் வழங்க முடியும்.

9). சார்க் நாடுகள் அமைப்பு 1985 டாக்காவில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் தலைமையகம் கட்மண்டில் உள்ளது.

10). ஐக்கிய நாடுகள் சபையின் நீதி வழங்கும் அமைப்பான சர்வதேச நீதிமன்றம் இரண்டாம் உலகப் போருக்குப்பின் நிறுவப்பட்டது.

11). மனித மூளை தன் ஆயுட் காலத்தில் பத்துக்கோடி செய்திகளைச் சேமிக்கும் திறன் கொண்டது.

12). மூளையில் கல்வியை மட்டுப்படுத்தும் பாகம் கார்லடக்ஸ் பெறாமூளை.

13). உடலில் மிக வலிமை வாய்ந்த பாகம் பல்லின் இனாமல்

14). கருவில் இருக்கும் குழந்தைகூட கனவு காண்கிறது.

15). மனித உடலில் 24 மூலகங்கள் உள்ளன.

16). உடம்பில் இரத்த ஓட்டம் இல்லாத பகுதி விழிவெண்படலம்.

17). மனித உடலில் முதலில் இறக்கும் பாகம் மூளையின் கலங்களாகும்.

Pam 1031

18). உலகின் முதல் சோதனைக் குளாய்க் குழந்தை 1978 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்த லூயிபிரவுண் என்னும் பெண் குழந்தை ஆகும்.

19). நமது மூளை 10,000 விதமான நறுமணங்களான நினைவு படுத்தக்கூடியது.

20). மோனாலீசா எனும் உலகப் பிரசித்தி பெற்ற சித்திரத்தை வரைந்தவர் லியடானோ டாவின்சி.

21). முதன்முதலில் எயிட்ஸ் நோயை கண்டுபிடித்தவர் இஸட்ஜான்சன்.

22). இயற்கையாக இறவாத உயிரினம் பக்ரீரியா

23). பொருளாதாரத்திற்கான நோபல்பரிசை வென்ற இந்தியர் அமெத்தியா சென்

24). உலகின் மிகப்பெரிய தீபகற்பம் அராபியா

25). உலகின் முதல் கிரிக்கெட் டெஸ்ட்மெச் இங்கிலாந்திற்கும் அவுஸ்திரேலியாவிற்குமிடையில் அவுஸ்ரேலியாவில் 1877ல் ஆரம்பமாகியது.

26). 2002 ஜனவரி 01ல் புழக்கத்திற்கு வந்த ஐரோப்பியாவில் உள்ள 11 நாடுகள் கூட்டாக செயற்படும் நோக்கம் கருதி உருவாக்கப்பட்ட நாணயம் யூரோ.

27). சர்வதேச உதைபந்தாட்ட போட்டிகளில் ஆயிரம் கோல்களைப் போட்டதன் மூலம் சாதனை புரிந்தவர் பேலே.

28). இலங்கையின் தேசிய விளையாட்டு எல்லே, கரப்பந்தாட்டம்

29). சாரணர் இயக்கம் பேடன்பலல் என்பவரால் 1907ல் ஆரம்பிக்கப்பட்டது.

30). சர்வதேச சமாதான ஆண்டு 1986

**புதிர் விடைகள்**

1) i) C ii) A

2) i) பச்சை, சிவப்பு ii) மஞ்சள், சிவப்பு iii) கறுப்பு

3) iv)

4) 22 புஸ்பங்கள்



உ
சிவமயம்

## தேவாரம்

1. எண்ணுகேன் என் சொல்லி எண்ணு கேனோ
    எம் பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களை கண் இல்லேன்
    கழலடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
    ஒக்க அடைக்கும்போ துணர மாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போது கின்றேன்
    பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

## திருவாசகம்

2. கண்க ளிரண்டும் அவன்கழல் கண்டு
    களிப்பன ஆகாதே
காரிகை யார்கள்தம் வாழ்விலென் வாழ்வு
    கடைப்படும் ஆகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு
    மறந்திடும் ஆகாதே
மாலறி யாமலர்ப் பாதம் இரண்டும்
    வணங்குதும் ஆகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல்
    பயின்றிடும் ஆகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள்
    பாடுதும் ஆகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து
    வெளிப்படும் ஆகாதே
மீன்வலை விசிய கானவன் வந்து
    வெளிப்படும் ஆயிடிலே.

## திருவிசைப்பா

3. தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ றாயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல(கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!


## திருப்பல்லாண்டு

4. புரந்தரன் மாலயன் பூசலிட்(டு)
ஓலமிட்(டு) இன்னம் புகலரிதாய்
இரந்திரந்(து) அழைப்பஎன் னுயிராண்ட
கோவினுக் கென்செய வல்லமென்றும்
கரந்துங் கரவாத கற்பக
னாகிக் கரையில் கருணைக்கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்
பாங்கற்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருத் தொண்டர் புராணம்

5. இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின்
வேண்டு கின்றார்
"பிறவாமை வேண்டும்: மீண்டும் பிறப்புண்டேல்
உன்னை என்றும்
மறவாமை வேண்டும்: இன்னும் வேண்டுநான்
மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ்
இருக்க" என்றார்.





## Useful Terms for beginners of Internet

***Browser***
Short for Web Browser; it's the tool (program) that allows you to surf the web. You probably used your Web Browser to locate this page. The most popular Web Browsers right now are *Netscape Navigator* and *Internet Explorer.*

***Chat Room***
A place on the Internet where people go to "chat" with other people in the room, actually there are thousands of these Chat Rooms.

***Cookie***
A "cookie" is an Internet site's way of keeping track of you. It's a small program built into a web page you might visit. Typically you won't know when you are receiving cookies. Ideally a cookie could make your surfing easier by identifying you, tracking sites you visit, topics you search, and get a general feel for your preferences. This can make surfing easier, faster, more personal, and more efficient. It can also be used to collect your e-mail address for marketing (spamming) purposes. You can set your browser to warn you before you accept cookies or not accept them at all. Check your (advanced) browser settings. Keep in mind that some secure sites, such as stock trading sites, won't work if you don't accept their cookies.

***Counter***
A number on many web pages that will count the number of hits or count the number of times the page has been accessed. Basically, it counts the number of people that have visited that page.

***Cracker***
A person who breaks into a site through a computer's security. While Basically the same thing as a"Hacker", a Cracker is sometimes considered to be more malicious and destructive.

***Cyberspace***
Term used to describe the Internet; the term was coined by science-fiction novelist William Gibson in 1984 in *Neuromancer.*

***Domain Name***
The highest-level name of the web site. For example, the domain name for this web site is jworkman. If you type usatoday in the location area on your browser, you will be connected directly to USA Today Online. A site does not have to have its own domain name. If you used geocities to host a web site, their domain name would be included in the Internet address and may look something like this: http://www.geocities.com/FashionAvenue/4869.

***Download***
The transfer of information from the internet to your computer. Every time you instruct your computer system to retrieve your mail, you are downloading your mail to your computer. You may also download programs to your computer. However, be careful about downloading files or programs from a site in which you are not familiar. You could download a virus and never know it until it's too late.

***E-mail***
Electronic mail. Your Internet Service Provider usually provides this tool. It allows you to send and receive mail (messages) over the Internet. Through e-mail you can write your friends, ask your Internet Service Provider a technical question about your service, or even receive an Internet birthday card.

***FAQ***
An acronym for Frequently Asked Questions. FAQ is exactly what it sounds like: Frequently Asked Questions,

with the answers of course. FAQ usually serves as a mini-help file.

### *FTP*
An acronym for File Transfer Protocol. It's the tool you would use to transfer files through the Internet from one computer to another. For example, you would use an FTP to upload your web page from where you built it (like your computer at home) to a web site (like this one) so that all of your friends and neighbours can look at it.

### *Gopher*
Invented at the University of Minnesota and named after its mascot, this is the direct precursor, in both concept and function, to the World Wide Web.

### *HTML*
Hypertext Mark-up Language. HTML is not really a programming language, but a way to format text by placing marks around the text. For example HTML allows you to make a word bold or underline it. Early word processing programs used to work this way. HTML is the foundation for most web pages.

### *http*
Hypertext Transfer Protocol. A protocol that tells computers how to communicate with each other. You will notice most web page locations begin with "http://"

### *Hacker*
Also known as a "Cracker", a Hacker is a person who breaks into a site through a computer's security.

### *Hypertext*
Text on a web page that links the user to another web page. The hypertext, or links will usually be a different colour than the other text on the page and is usually underlined.

### *Hypermedia*
Media (such as pictures, videos, and audio), on a web page that links the user to another web page by clicking on the media.

### *Host*
The computer on which a web site is physically located.

### *IRC*
An acronym for Internet Relay Chat. Worldwide real-time conferencing on the Internet, There are hundreds, maybe thousands of IRC channels, also called chat rooms. These chat rooms typically focus on specific topics, issue or commonality.

### *ISP*
Internet Service Provider. This is your connection to the Internet. You use an ISP to connect onto the Internet every time you log on.

### *Internet*
Originally called ARPANET after the Advanced Research Projects Agency of the U.S. Department of Defence. This electronic network connects the hosts together so that you may go from one web page to another efficiently. The electronic connection began as a government experiment in 1969 with four computers connected together over phone lines. By 1972, universities also had access to what was by then called the Internet.

### *Java*
A programming language that developers use to create *applets*, small programs that are embedded in Web pages and that run when a user accesses the page or clicks on a certain area. If you have visited sites that play sounds, have animated figures trotting across the screen, or display scrolling text, you have already seen Java.

***Keyword***
A word you might use to search for a Web site. For example, searching the Web for the keyword "Dictionary" or "Terms" might help you find this site.

***Laptop***
A computer small enough to sit on your lap. The laptop computer's small size allows you to take it almost anywhere and access the Internet. Great if you travel a lot and don't want to go too long without your e-mail.

***Link***
A link will transport you from one Internet site to another with just a click of your mouse. Links can be text or graphic and are recognizable once you know what to look for. Text links usually will be underlined and often a different colour than the rest of the text on your screen. A graphic link usually has a frame around it. For example at the bottom of this page the mailbox is a link as well as the text in the yellow boxes.

***Load***
Short for download and upload. If someone asks how long did the page take to load? He/She is referring to the time it takes a page to appear on your screen. If a web page is loading slowly it means that it's taking a long time to fully appear on your screen. You can often scroll through a page and look at the parts that have loaded while the rest of the page continues to load. Also, you can usually click a link on the page you are loading and link to another page without waiting for the current page to fully load.

***Location***
An Internet address. While you are in your browser (which you are probably in now) you will see a section at the top of the page that is titled "location". If you look right now you will see that the location of this web page is http://www.geocities.com/FashionAvenue/4869/desc.html. If you type in the address of someone's web page and hit enter, your browser will take you to that page. However the address you type in the location bar must be an exact match.

***Modem***
Short for Modulator-demodulator devices. Modems allow computers to transmit information to one another via an ordinary telephone line.

***Net***
Short for Internet.

***Newbie***
You! (Beginner)

***Newsgroups***
Also called Usenet, they are groups that often have nothing to do with news. Newsgroups are ongoing discussion groups among people on the Internet who share a mutual interest.

***Online***
Having access to the Internet. You are online right now. Often people will say they are online meaning they have access to the Internet and have an e-mail address, but may not necessarily be connected to the Internet at that moment.

***Patience***
What you need while surfing the web. Some web pages seem to take forever to fully appear on your screen.

***Persistence***
What you often need to learn anything, including becoming proficient on the Internet.

***Protocol***
A set of rules that lets computers agree how to communicate over the Internet.

**Scroll**
To look at the parts of the page that fall below (or above) what you see on your screen. The long bar at the far right of this screen is a scroll bar. The small square in it will allow you to scroll through the rest of this page. Just place your mouse pointer over the square, hold down the left click button on the mouse and slide the square up or down. You will see this page move. You are now scrolling.

**Site**
A place on the Internet. Every web page has a location where it resides which is called it's site. And, every site has an address usually beginning with "http://."

**Spam (or Spamming)**
The Internet version of junk mail. Spamming is sending the same message to a large number of users, usually to advertise something. E-mail address may be collected using cookies or a mailing list from a newsgroup.

***Surfing***
The process of "looking around" the Internet. You're doing it now.

***Trojan Horse***
Like the Trojan horse of mythology, Trojan horse viruses pretend to be one thing when in fact they are something else. Typically, Trojan horses take the form of a game that deletes files while the user plays.

***URL***
An acronym for Uniform Resource Locator. It's the address of each web site. It usually begins with "http://"

***Upload***
The process of transferring information from your computer to another computer through the Internet. Every time you send e-mail to someone you are uploading it.

***Usenet***
A collection of so-called news groups that have nothing to do with news. Usenet are ongoing discussion groups among people on the Internet who share a mutual interest.

***User ID***
This is the unique identifier (like your logon name) that you use to identify yourself on a computer. You probably typed your User ID (and password) when you logged onto the Internet today.

***Virus***
Your computer can get a virus just like your body can be invaded with a virus making you (or your computer) sick. A virus can wipe out information on your computer and create major havoc. Viruses usually originate from malicious people. You can unintentionally download virus from a web site or get it from a disk that someone has lent you. There are virus-checking programs, but there are new viruses popping up every day. So the best defence against a virus is to be very careful not to download programs or data from a site you're not familiar with.

***WAIS***
An acronym for Wide Area Information System, which basically means lots of large databases, you can search through. It was designed by WAIS Corp. as a way of accessing very large databases.

***WWW***
An acronym for the World Wide Web.


***Web***
Short for the World Wide Web.

***Web Browser***
The tool (program) that allows you to surf the web. You probably used your Web Browser to locate this page. The most popular Web Browsers right now are *Netscape Navigator* and *Internet Explorer.*

***Web Page***
Every time you are on the Internet, you are looking at a Web Page. Yes that includes this page.

***World Wide Web***

A full-colour, multimedia or database of information on the Internet. Like the name implies the World Wide Web is a universal mass of web pages connected together through links. Theoretically, if you clicked on every link on every web page you would eventually visit every corner of the world without ever leaving your computer chair. Of course you would also have to live until you were about a million years old and computers were antiquated technology



Pam 1031



# நாம் நவில்கின்றோம் நன்றிதனை!!



அன்புடையீர்

திரு.க.பா. ஸ்கந்தானந்தா அவர்கள் அமரத்துவ மெய்திய செய்திகேட்டு, மீளாத்துயரிலிருந்த எங்களுக்கு ஆறுதலளித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் தூரத்திலிருந்தும், அயல் நாடுகளிருந்தும் ஆறுதல் கூறியும், கடிதச் செய்தி அனுப்பியும் தேறுதற்படுத்திய நண்பர்கள், உறவினருக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் மலர்வளையங்கள் சாத்தி ஆத்ம சாந்திக்காக வேண்டிய அன்னாரின் பணிபுரியுமிடத்து அதிகாரிகள், உத்தியோகத்தர், ஊழியர் அனைவருக்கும் நன்றி நவில்கின்றோம்.

இறந்ததிலிருந்து இறுதிக்கிரியைவரை சகல விதத்திலும் ஒத்தாசை, உதவி புரிந்த அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியை கூறிக் கொள்கிறோம். மிகக் குறுகிய நேரத்தில் இம் மலரினைச் செம்மையாகவும், திருத்தமாகவும் அச்சிட்டுதவிய "லீலா பிரிண்டேஸ் (Pvt) லிமிட்டட்" ஸ்தாபனத்தாருக்கும், இன்னும் இதிலடங்கா பல உதவிகளைப் புரிந்த அனைவருக்கும் எங்கள் நன்றிகள் உரித்தாகட்டும்.

**இங்ஙனம்.**<br>
**மனைவி. மக்கள்.**<br>
**சகோதரர்கள்.**

காலத்தி னால் செய்த நன்றி சிறிது எனினும்<br>
ஞாலத்தின் மாணப் பெரிது - வள்ளுவர்

---

## ACKNOWLEDGEMENT

*Our deepest gratitude and heartful thanks to all relatives from inland and foreign, neighbours and staff of the Maharajah Group specially Harrisons shipping (Pvt) Ltd. and Asset advertisers (Pvt) Ltd., who helped in many ways on the very inception of hearing the unexpected and uneventful message and sent floral tributes. Our sincere thanks to all including the printers for printing the memorial tribute.*

*C 3/4 Hospital Road.*<br>
*Dehiwala.*

*Wife Children*<br>
*brothers and sisters*

*PRINTED BY : LEELA PRESS (PVT) LTD. COLOMBO - 12.*